## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.

**அசல் வழக்கு எண்.87/2023**

2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய விண்மதி.**PW.1** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 09.12.2024

| | | | |
|---|---|---|---|
| Name | : விண்மதி | | |
| Husband Name | : சபாபதி | Court | : |
| Village | : ஆறுபாதி | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 43 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

04.03.2023 தேதியிட்ட எனது தாயார் மயிலாம்பாளின் இறப்பு சான்றிதழின் கணினி நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சபாபதி என்பவரின் வாரிசு சான்றிதழின் கணினி நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.08.1984 தேதியில் எனது தாயார் மயிலாம்பாள் கிரயம் பெற்ற கிரய சாசனத்தின் கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.03.2023தேதியிட்ட தாவா சொத்திற்கான பட்டாவின் கணினி நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிடப்பட்டது) நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.04.2023 தேதியிட்ட வட்டாச்சியரால் வாதிக்கு வழங்கப்பட்ட கணவரால் கைவிடப்பட்ட

சான்றிதழின் கணினி நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.05.2023 அன்று வாதி, பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் ரசீது அசல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் ஆவணங்களை குறியீடு செய்ய தாக்கல் செய்யவேண்டி உள்ளதால் வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.